# பொதுநூல் உணர்த்தும் நெஞ்சொடு புலத்தல்

**முனைவர் இரா. தனலெட்சுமி,**

**உதவிப் பேராசிரியர், இலக்கியத்துறை,**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010.**

5

**ஆய்வுச்சுருக்கம்**

வள்ளுவம், உலகிற்குத் தமிழ் வழங்கிய அருங்கொடை. சமயங்கள் கடந்த அறவியலை மொழிந்து, அகம் மற்றும் புறம் இரண்டையும் ஏற்றது. இல்லறம், துறவறம் இரண்டையும் கொண்டாடியது. முடியாட்சி, குடியாட்சி இரண்டையும் அங்கீகரித்தது. சம உரிமை, சம உடைமை இரண்டையும் போற்றி கல்வி, மருத்துவம் இரண்டையும் வலியுறுத்துகிறது. வள்ளுவர் தன் காலத்தில் காலூன்றி எக்காலத்துக்கும் தேவையான 'மனிதவியலை' முன்மொழிந்துள்ளார். அவ்வகையில் வள்ளுவப்பெருந்தகை, தனித்தன்மைமிக்க தீர்க்கதரிசியாகத் திகழ்கின்றார். வள்ளுவர் தம் குறளில் எளிமையுடன் ஒத்த உயரிய வாழ்க்கையை இயல்பாகச் சிந்தித்துள்ளார். மாந்தன் தனக்குத்தானே செய்துகொள்ள வேண்டிய கடமைகள், உலகத்திற்குச் செய்யவேண்டிய கடமைகள் முதலிய பரந்துபட்ட கேள்விகளுக்கு வள்ளுவர் தரும் விடைகள் பெருந்தன்மையுடையன. அவ்வகையில் வள்ளுவர் பல்வேறு கருத்துகளை முன்மொழிந்து போதித்துள்ளார்.

அறம், பொருள், இன்பம் என முந்தையர் தமிழ்நெறியைத் தொல்காப்பியர் சுட்டுகிறார். மூவேந்தர் முக்குடை வரிசையாகச் செல்வதை அறம், பொருள், இன்ப வரிசையொடு ஒப்பிட்டுப் புறப்பாடலும் சொல்கிறது. ஆனால் வள்ளுவர் அறம், பொருள், காமம் என்கிறது. அதனை உறுதிப்படுத்தும் வகையில் மூன்றாம் பகுப்பான இன்பத்துப்பாலில் முப்பத்தொன்று(31) இடங்களில் 'காமம்' என்ற சொல்லை எடுத்தாள்கிறார். அவ்வகையில் காமத்துப்பாலில் இடம்பெற்றுள்ள 'நெஞ்சொடு புலத்தல்' என்ற அதிகாரத்தை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**திறவுச்சொற்கள் :** கதிரவன், நெஞ்சம், நாணம், ஊன்றுகோல், வன்மம், தரணி, பொந்து, மண்மேடு .

**முன்னுரை**

**"வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம்**

**வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி"**

என்று தமிழின் பெருமையைப் பறைசாற்றுவார் பாவலரேறு பெருஞ்சித்திரனார். இச்சிறப்புப் பெற்ற தமிழுக்கும் தமிழினத்திற்கும் பெருமை சேர்க்கும் கருத்துப் பெட்டகமாகத் திகழ்வது திருக்குறள். அறத்தைச் சொல்லி பொருளைப் பெறுவதற்கு வழிகாட்டி இன்பத்தைப் பெறும் வாழ்வியலின் விழுமியங்களைத் திறம்பட எடுத்தாளும் உலகப் பொதுநூல் திருக்குறள். உலக மக்களின் நல்வாழ்விற்கு ஊன்றுகோலாய் இருந்து தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. மழலை முதலாக மாமன்னன் ஈறாக மனிதவினம் எப்படி வாழ வேண்டும் என்ற செல்நெறியை செப்பும் பண்பாட்டு நூல். ஒரு தனிமனிதன் அவனது வாழ்க்கையில் ஒரு முறையாவது திருக்குறளை முழுமையாகப் படித்து அதன்வழி வாழ்வோனேயானால் நிச்சயமாகக் குற்றங்களும் வன்மங்களும் இல்லாத சமுதாயம் சாத்தியமாகும். இவ்வாறு ஒட்டுமொத்த உலக அளவிலான வாழ்வியலைக் கூறும் வள்ளுவர் இல்லற வாழ்க்கை இனிமையாக அமைய இலக்கணம் கற்பித்துச் சென்றிருக்கிறார்.

**காமத்துப்பால்**

வாழ்வியல் நூலாம் திருக்குறளின் மூன்றாம் பகுதி 'இன்பத்துப்பால்' எனச் சுட்டப்படுகிறது. தோன்றிய காலத்தில் இருந்து வழங்கிய பெயர் 'காமம்' என்ற சொல்லே. காமத்துப்பால் மூன்றாம் பாலாய் இடம்பெற்றிருப்பினும் வாழ்வின் அடித்தளமாய் முதன்மைப்பொருளாக விளங்க வேண்டியது காமத்துப்பாலே.

இன்பம் என்பது எல்லா உயிர்களுக்கும் அமைந்த உயிர் உரிமை. உயிர்களின் பிறப்போடே தோன்றி வளர்ந்து, பெருகி வரும் தன்மை உடையதாகும். ஆகவே இவ்வியற்கையின் நுட்பத்தைப் பழந்தமிழர் காவலர் தொல்காப்பியர்,

**"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**

**தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்"**

என அழகாகப் படம்பிடித்துக் காட்டினார். இன்பம் என்பது எல்லா உயிர்களுக்கும் பொதுவகைப்பட்டது. ஆனால் காமமோ அத்தகையதன்று. அஃது ஆறறிவு உயிராகிய மாந்தர்க்கே சிறப்பு உரிமை உடையதாகும். ஏனெனில் "காமம் உடலின் அளவில் நில்லாமல், நெஞ்சின் நிறைவாகி ஈருயிர் ஒருயிராய் ஒன்றும் பெருமை வாய்ந்தது" என்பதை 'காமம்' எனும் சொல்லே தெரிவிக்கும். ஆகவே வள்ளுவர் மூன்றாம் பாலில் காமம் என்ற சொல்லைப் பயில

வழங்கினார்.

உயிர் தளிர்க்கச் செய்யும் உறைவிடமாய் விளங்கும் காமத்துப்பால் இருபத்தைந்து அதிகாரங்களைக் கொண்டது. தமிழ்நெறி உரிய பொருட்களோ ஐந்து உரிப்பொருள்களுக்கும் ஐந்தைந்து அதிகாரங்கள் பாடி தமிழ்நெறியை மெய்ப்பித்த தமிழ் நெறிக்காவலர் திருவள்ளுவர் ஆவார்.

1. புணர்தலாகிய உரிப்பொருளையும் அதன் சார்பையும் விளக்குவது முதல் ஐந்து அதிகாரங்கள்.
2. பிரிதலாகிய உரிப்பொருளையும் அதன் சார்பையும் விளக்குவது இரண்டாவது ஐந்து அதிகாரங்கள்.
3. இருத்தலாகிய உரிப்பொருளையும் அதன் சார்பையும் விளக்குவது மூன்றாவது ஐந்து அதிகாரங்கள்.
4. இரங்கலாகிய உரிப்பொருளையும் அதன் சார்பையும் விளக்குவது நான்காவது ஐந்து அதிகாரங்கள்.
5. ஊடலாகிய உரிப்பொருளையும் அதன் சார்பையும் விளக்குவது ஐந்தாம் ஐந்து அதிகாரங்கள்.

அ. புணர்ச்சி விதும்பல்

ஆ. நெஞ்சொடு புலத்தல்

இ. புலவி

ஈ. புலவி நுணுக்கம்

உ. ஊடலுவகை

ஒருவோர் ஐந்தனுள்ளும் இடைநின்றது உரிப்பொருளையும் முன்னுள்ள இரண்டு அதிகாரங்களும் பின்னுள்ள இரண்டு அதிகாரங்களும் அதன் சார்பு நிலைகளையும் விளக்கி நிற்பதையும் காண முடிகின்றது.

**நெஞ்சொடு புலத்தல்**

‘நெஞ்சொடு புலத்தல்’ என்ற அதிகாரம் தன்னையும் நெஞ்சையும் வேறுவேறாகப் பிரித்துக் கொண்டு பேசும் இலக்கிய மரபில் அமைந்த அதிகாரம். தலைவி ஊடல் மேல் கருத்துச் செலுத்தாது கூடல் மேல் நாட்டம் கொள்கிறாள். ஆனால் தான் புணர்ச்சி ததும்பும் தன்மையள் அல்லள், தன் நெஞ்சமே காரணம் எனத் தோற்றம் அளிக்கும்படி காதலனைக் கூடுதற்கு வரைகின்ற நெஞ்சைப் பார்த்துத் தலைவி புலந்து பேசுவதாக உள்ளது.

நெஞ்சாவது தன்வழி நில்லாது ஓடுவதைக் கண்டு அதனிடத்துச் சிறு கோபம் காட்டுதலே நெஞ்சொடு புலத்தலாகும். நெஞ்சைத் தனித்து நிறுத்தி அது செய்யும் கொடுமைகளைக் காட்டித்

தலைவி அதனோடு கோபிப்பதைப் போலக் கூறுகிறார் - ஜி. வரதராஜன்

**தலைவியின் நிலை**

கண்ணுக்கு மையெழுதி, மணிமாலையணிந்து, கை நிறைய வளையேந்தி, புன்னகை பூத்த முகத்துடன் பெண்மை நிறைந்த பொலிவுடன் விளங்குகின்றாள் தலைவி. கூடுவதற்கு முன் அவனுடன் ஊடுவதா? வேண்டாமா? என்ற தடுமாற்ற நிலையில் தலைவி இருக்கிறாள். ஊடுதலுக்கு முன்னால் இங்கு தன் நெஞ்சுடன் விளையாட்டுத்தனமாக உரையாடுகிறாள். **(குறள்: 1291)**

'நெஞ்சே! அவருடைய மனம் நம்மை நினையாதிருப்பதை அறிந்தும் நீ எனக்காக நில்லாமல் அவரையே நினைத்தற்கு காரணம் என்ன?' என்று அவள் நெஞ்சை அவளே கேள்வி கேட்பதுபோல் அமைந்துள்ளது. இதனை,

**"குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ**

**………………………………………..**

**போயின்று கொல்லோ நோய்தலை மணந்தே"** **(நற்றினை - 56)**

தலைவனை நாடிச் சென்ற நெஞ்சம் தலைவன் விரும்பிச் செய்யும் முயற்சிக்கு அயராது உடனிருக்கும் விருப்பத்தால் வருந்தி இருக்கின்றதோ தலைவன் புலம்புவதாக அமைந்து காணப்படுகிறது

"என் நெஞ்சே! நம்மேல் அன்பு கொள்ளாது இருக்கிறார் என்பதை உள்ளவாறு நீ அறிந்திருந்தும் நாம் சென்றால் அவர் நம்மீது வெறுப்புக் கொள்ளாமல் நடந்து கொள்வர் என்று நினைத்து அவரிடம் சேர்கிறாயே. இதைக்காட்டிலும் விஞ்சிய ஓர் அறியாமை உலகில் உண்டோ?" என தன் நெஞ்சைக் கேட்கிறாள். **(குறள் - 1292)** இதைப் போலவே சங்க இலக்கியங்களில் அதிகமான பாடல்கள் இடம்பெறுகிறது.

**"முள்ளி வேரளைக் களவன் ஆட்டி**
**பூக்குற்று எய்திய புனல் அணி ஊரன்**
**தோற்றம் செய்துநம் புணர்ந்து இனித்**
**தாக்கணங்கு ஆவது எவன்கொல்?"** **(ஐங்குறுநூறு - 23)**

இளமகளிர் முள்ளி வேரின் பொந்துகளில் வாழும் நண்டுகளை அலைந்து விளையாடுவர். பூக்களைப் பறித்து இன்பம் தருவர். இத்தகு நீர்வளமுடைய ஊரனாகிய நம் தலைவன் நம்முடன் இணைந்து, நான் இனிப்பிரியேன் என்று நம்மைத் தெளிவித்தபின் இப்போது தம்மை வருந்தும்

தெய்வம் போன்று அமைகின்றான். அது ஏன்? என்று தலைவியின் கூற்றாக அமைகிறது.

"நெஞ்சமே! நீ என்னைக் கைவிட்டு உன் விருப்பப்படி அவரைப் பின் தொடர்ந்து செல்வது எதனால்! ஏழையாகிவிட்டவர்களை உற்றார், உறவினரும் கைவிட்டு விடுவர் என்னும் பழமொழிக்கு நீயும் உட்பட்டவள் ஆகிவிட்டாயா?" என வினவுகிறாள். (குறள் - 1293)

**"முட்டின் றொருவர் உடைய பொழுதின்கண்**
**அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே**
**கட்டனர்தார் மார்ப கலியூழிக் காலத்துக்**
**கெட்டார்க்கு நட்டாரோ இல்"** (பழ.நானூ.59)

என்னும் பழமொழிப் பாடல் உவமைக்கு நல்ல விளக்கமாய் அமைந்துள்ளது. என் மனம் காதலரை அடையாத போது அவரை அடையவில்லையே என அஞ்சுகிறது. அவரை அடைந்த பின்னர் என்னைவிட்டுப் பிரிந்து விடுவாரே என்று அஞ்சுகிறது. (குறள் - 1295) இதனால், என் மனம் எப்போதும் தீராத துன்பம் உடைதாக இருக்கின்றது எனக் கூறுகின்றாள். இதை,

**"கண்பொர விளங்கிய கதிர்தெறு வைப்பின்**
**மண்புரை பெருகிய மரம்முளி கானம்**
**இறந்தனரோ நம் காதலர்?**
**மறந்தன ரோதில் மறவா நம்மே?"** (ஐங்குறுநூறு - 319)

என்ற பாடலில் 'தலைவனை அடைந்த மனம் அவர் மறந்தாலும் என்னால் மறக்க இயலவில்லையே' என்று தலைவி புலம்புவதாக அமைந்து காணப்படுகிறது. இதைப் போன்ற பல கருத்துகள் குறுந்தொகை, அகநானூறு போன்ற நூல்களில் பயின்றுவருவதை காணமுடிகிறது.

**தலைவியின் தலை துயர்**

காதலைப் பிரிந்து தனித்து இருக்கையில், அவரைப் பற்றி நினைக்கும் போது, என் நெஞ்சு என்னைத் தின்பது போலத் துன்புறுத்திக் கொண்டிருந்தது எனத் தோழியிடம் உரைக்கிறார். (குறள் - 1296) என்று வள்ளுவர் கூறுகின்றார். அதனையே,

**"ஞாயிறு ஞான்று கதிர் மழுங்கின்றே**
**எல்லியும் பூவி கொடியின் புலம்புஅடைந் தன்பே**
**…………………………………………………………**
**தமியேன் கேட்குவென் கொல்லோ**

**பரியரைப் பெண்ணை அன்றிற் குரலே?" (நற்றினை - 218)**

கதிரவன், மேல் திசையில் மறையக் கதிர்கள் ஒளி மருங்கின. பூ உதிர்ந்த கொடிபோல இரவுப் பொழுதே தனித்து பொலிவின்றி வந்தது. இடம்விட்டு இடம் மாறி வெளவால்கள் பறந்து திரியும். என்னைப் பிரியும்போது தேற்றிய காதலர் வருவதாகக் கூறி பாடுவதும், வந்தது. பருத்த அடியையுடைய வேப்பமரத்தின் பெரிய கிளையிலிருந்து குரால் ஆகிய ஆந்தை இரவு முழுவதும் குழறி ஒலி எழுப்பியதாய் என் தீராத காம நோய் மிகுதியாகி வருந்தினேன் என்று தலைவியின் தனிமைத்துயர் வெளிப்படுகிறது. **(குறள்1297)**

இராமனைக் கண்ட சீதா பிராட்டி காதல் நோய் மிகுதியால் வருந்த அவனைச் சேடியர் அழைத்துப்போக சீதமலர் சுமளியில் சேர்த்திய நிகழ்ச்சியைக் கூறுகின்ற கம்பர் பிராட்டியின் நிலையாக "கலங்குழைந்து நெருநானும் கண்ணற" என்கிறார். பெண்களுக்கு நாணம் இன்றியமையாத குணம். ஏனைய பெண்மை குணங்கள் எல்லாம் நாணத்தையே அடிப்படையாகக் கொண்டு வளர்வன என்கிறது கம்பராமாயணம்.

ஒருவர்க்கு தாம் உரிமையாகப் பெற்ற நெஞ்சமே உறவாகாத போது அயலார் உறவில்லாதவராக இருப்பது எளிதேயாகும். **(குறள் 1300)** இதையே தலைமகன் பிரிந்தவழி அவன் உணர்த்தாது பிரிந்தமையை கூறிய தோழிக்குத் தலைமகளை சொல்லியதான பாடல் அடிகள்,

**"கண்பொர விளங்கிய கதிர்தெறு வைப்பின்**
**மண்புரை பெருகிய மரம்முளிகாணம்**
**இறந்தனரோ நம் காதலர்?**
**மறந்தன்ரோ திம் மறவா நம்மை?" (ஐங்குறுநூறு - 319)**

கண் ஒளி மாறுபட விளங்கின்ற வெயில் மிகுந்து வருத்தம் செய்யும் இடங்களை உடையதாய் மண்மேடுகள் பெருகிய மரங்கள் எல்லாம் கருகி அலர்ந்து போன காட்டை நம் காதலர் கடந்து சென்று அவரை மறவாத நம்மை மறந்தாரே? என்று தலைவி தலைவனை நாம் மட்டுமே நினைக்கும் நிலையில் தலைவன் தன்னை நினைக்கவில்லையே என்று புலம்புவதாக அமைந்துள்ளது.

**முடிவுரை**

தன்னையும் நெஞ்சையும் வேறுவேறாகப் பிரித்துக் கொண்டு பேசும் இலக்கிய மரபில் அமைந்த அதிகாரம் இது. தலைவி ஊடல் மேல் கருத்துச் செலுத்தாது கூடல் மேல் நாட்டம் கொள்கிறாள். ஆனால் தான் புணர்ச்சி ததும்பும் தன்மையள் அல்லள். தன் நெஞ்சமே காரணம் எனத்தோற்றம் அளிக்கும்படி காதலனைக் கூடுதற்கு விரைகின்ற நெஞ்சைப் பார்த்துத் தலைவி புலந்து பேசுவதாக அமைந்ததால் இது நெஞ்சொடு புலத்தல் என்று அழைக்கப்படுகிறது. மேலும் இலக்கியங்களில் இந்நூல் தனித்ததொரு இடத்தைப் பெற்றுள்ளது.

**துணைநூல் பட்டியல்**


1. கலியபெருமாள். க., திருக்குறள் யாப்பிலக்கண நோக்கில் செம்பதிப்பு, பாவை பிரிண்டர்ஸ், சென்னை – 14.
2. சுப்பிரமணியன். ச.வே, சங்க இலக்கியம், எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும் தொகுதி – 1, மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600 108.
3. திருக்குறள் தேவிரா உரை, ஸ்ரீ நந்தினி பதிப்பகம், அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், சென்னை – 01.
4. படிக்கராமு. மு, வள்ளுவ வளம், வளவன் பதிப்பகம், சென்னை – 600 017.
5. வரதராசனார். மு, திருக்குறள் தெளிவுரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
6. எஸ்.ஆர்.கே, திருக்குறள் ஆய்வுரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை -600 098.